# மாகாண சபைகளின் கீழ் பல்கலைக்கழகங்கள் அமைந்தால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கை!

## நாடாளுமன்றில் சரத் வீரசேகர எம்.பி. வியாக்கியானம்

மாகாண சபைகளின் கீழ் பல்கலைக்கழகங்கள் கொண்டுவரப்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின்படி பல்கலைக்கழ கங்களை ஆரம்பிக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு இருப்பதாக வரவு -செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் அன்றி, மாகாணசபைகளினால் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டால், அது பாரிய விளைவுகளையே ஏற்படுத்தும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் கல்விக்கான அதிகாரம் கூறப்பட்டுள்ளதே ஒழிய, பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறப்படவில்லை.

அப்படி நேர்ந்தால், கிழக்கு மாகாணத்தில் மத்திய கிழக்கு நாடுகளின் அனுசரணையுடன் வஹாபி பல்கலைக்கழகங்கள் அல்லது ஷரீஆ சட்டத்தைக் கற்பிக்கும் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க முடியுமாக இருக்கும். 2 ▶



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 30 புதன்கிழமை 16.11.2023 கதிர் 114

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# எனக்கும் எனது குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது!

## அமைச்சர் ரொஷான் தெரிவிப்பு



தனக்கும் தனது குடும்பத்துக்கும் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் தனது பாதுகாப்பு குறித்து ஆராயுமாறும் சபாநாயகரிடம் அமைச்சர் ரொஷான் ரணசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பிய அவர், ஷம்மி சில்வா உள்ளிட்டவர்கள் அண்மையில் செய்தியாளர் சந்திப்பின்போது தமக்கு எதிராக அச்சுறுத்தும் விதத்தில் பேசியிருந்தாகக் குறிப்பிட்டார். 2 ▶

# எங்களையும் உயிருடன் விடுதலை செய்யுங்கள்! எஞ்சியுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள்



எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள், என்று பல வருடங்களாகச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த 2006 ஒகஸ்ட் 14 ஆம் திகதி, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, 15 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, 'நிரபராதிகள்' எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் 2 ▶

# நாடாளுமன்றத்தைக் கைப்பேசியில் வீடியோ எடுத்த இளைஞனுக்கு பிணை

### எவ்வாறு குற்றமாகும் என்பதை விளக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்!

பத்தரமுல்ல பெலவத்தை ஜப்பானிய நட்புறவுப் பாலத்திலிருந்து நாடாளுமன்ற வளாகத்தை கையடக்கத் தொலைபேசி மூலம் வீடியோ எடுத்ததாகக் கூறப்படும் நபரை தலங்கம பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதையடுத்து, அந்நபரை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கடுவெல 2 ▶

# கிரிக்கெட் சபை வழக்கிலிருந்து மற்றொரு நீதிபதியும் விலகினார்!

கிரிக்கெட் இடைக்காலக் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலிப்பதில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நீல் இத்தவெலவும் விலகியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணையில் இருந்து விலகுவதாக நீதியரசர் நீல் இத்தவெல அறிவித்த நிலையில் இந்த வழக்கில் இருந்து இதுவரை 3 நீதியரசர்கள் விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை, இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான டி.என்.சமரகோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த மனு மீதான விசாரணையிலிருந்து விலகுவதாக நீதிபதி நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

இந்த மனுவைப் பரிசீலிக்கும் புதிய நீதியரசர்கள் அமர்வுக்கு நீதியரசர்களான சோபித ராஜகருணா 2 ▶

# நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கப்போவதில்லை!

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கருத்து



நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தவறாக கையாண்டமைக்கு தானும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலரும் பொறுப்புக்கூற வேண்டுமெனும் உயர் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்திற்கு காரணமானவர்களுக்கு எதிரான அண்மையில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுக்கள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர், நிதி அமைச்சர், 2 ▶

# வரவு செலவுத் திட்டத்தை எதிர்கட்சியினர்தான் தோற்கடிக்கவேண்டும் – நாமல் எம்.பி. தெரிவிப்பு



சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க் கட்சியினர் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்களால் வரவு செலவுத் திட்டத்தில் இருக்கும் பிழைகளை மாத்திரமே சுட்டிக்காட்ட முடியும் என்றும் அதனைத் தோற்கடிப்பதற்கான உரிமை எதிர்கட்சியினருக்கே இருக்கின்றது என்றும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் போது உரம் தொடர்பான விடயத்தில் வாயை மூடிக்கொண்டு 2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து மொட்டுவின் ஊடக சந்திப்புகள் ரத்து

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாளாந்த ஊடகவியலாளர் மாநாட்டை இரண்டு வாரங்களுக்கு நடத்தாதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்கு ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட அதிகார வர்க்கக் குழுவே காரணம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து அக்கட்சி பெரும் சிக்கலில் உள்ளது.

இதனால் ஊடகங்களின் கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை கட்சிக்கு ஏற்பட்டுள்ளதால் மேற்படி தீர்மானத்தை அக்கட்சி எடுத்துள்ளது என்று தெரியவருகின்றது.

நிலைமை ஓரளவுக்கு அமைதியடையும் வரை கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பை இரண்டு வார காலத்துக்குத் தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாகாண சபைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல், கனடாவின் ஒன்டேரியோ பிராந்திய பாடசாலைகளில், இலங்கையில் தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் கற்பிக்கப்படுவது போன்று, வடக்கில் ஆரம்பிக்கப்படும் தனியார் பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் மனங்களை மாற்றும் இவ்வாறான பாடத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டுவிடும்.

பல்கலைக்கழகங்கள் நாட்டை முன்னேற்றும் வகையிலும் நாட்டுக்கான புத்திஜீவிச் சமூகத்தை உருவாக்கும் வகையியுமே இருக்க வேண்டுமே ஒழிய, அரசியல் நோக்கத்திற்காகவோ ஆளுநர் அல்லது முதல்வர்களின் தேவைக்காகவோ ஸ்தாபிக்கப்படக்கூடாது, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## கிரிக்கெட் சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் டி.என்.சமரக்கோன் ஆகியோர் பெயரிடப்பட்டனர்.

இதனையடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் புதிய நீதியரசர்கள் குழுவின் முன்னிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு விவகாரம் குறித்த மனு மீதான பரிசீலனை இடம்பெறவுள்ளது. (04)

## எங்களையும் உயிருடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைக் கடந்த 10 ஆம் திகதி விடுதலை செய்துள்ளது.

அந்த வழக்கில், மாத்தளையைச் சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திரராஜா சார்பில் சட்டத்தரணிகளான தனுக்க நந்தஸ்ரீ, எஸ்.அனுஷ ாங்கன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் குறித்த குடும்பஸ்தரிடம் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தமது வாதாட்டத்தின் மூலம் சட்டத்தரணிகள் வலுவிழக்கச் செய்திருந்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில் முன்னாள் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாதசுந்தரமும் முன்னின்று வழக்கை நெறிப்படுத்தினர்.

மூன்று சந்தேகநபர்களை 'நிரபராதி' என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15 ஆண்டுகள் எடுத்துள்ளது என்பது உண்மையில் கவலை தரும் விடயமே.

இருப்பினும், மிக நீண்ட காலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்து வந்த இவர்கள் விடுதலை பெற்று அவர்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் இருக்கும் எமது உறவுகள், "எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!" எனக் கூறி விழி கலங்க வழியனுப்பி வைத்துள்ளனர் என்று 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10 பேரையும் ஜனாதிபதி பொது மன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டும் என்று ஒரு மனிதநேய அமைப்பாக நாம் விநயமுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த பல வருடங்களாகத் தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பானது, மீதமுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில் நடைமுறைக்குச் சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும்." - என்றுள்ளது. (அ)

## வரவு செலவுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்ததால் இறுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் அவர் நினைவூட்டினார்.

அதேவேளை வரவு செலவுத் திட்டத்தில் இருக்கும் விடயங்கள் முன்பு போல கைவிடப்படாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். (04)

## நீதிமன்றத் தீர்ப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த தீர்ப்பை ஏற்கமாட்டேன் எனவும், வாய்ப்பு கிடைக்கும்போது அதற்கான காரணங்களை விளக்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த கட்சி மாநாடு பிரமாண்டமாக நடத்தப்படும் எனவும், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## எனக்கும் எனது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஆகவே, இது தொடர்பில் ஆராய்ந்து, தனது பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் சபாநாயகரரிடம் கேட்டுக்கொண்டார். (04)

## நாடாளுமன்றத்தைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் சானிமா விஜேபண்டார உத்தரவிட்டார்.

தலங்கம பிரதேசத்தைச் சேர்ந்த யொஹான் ஜயவீர என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்த கைத்தொலைபேசி மற்றும் இரண்டு சிம் கார்ட்களையும் பொலிஸார் மன்றில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கமல் விஜேசிறி, நாடாளுமன்றத்திற்கும் ஜப்பான் நட்புறவுப் பாலத்திற்கும் இடையில் அதிக தூரம் உள்ளதால், அத்தகைய தொலைவிலிருந்து பிரஜை ஒருவர் வீடியோ எடுப்பது குற்றமல்ல. இந்தக் கைது மூலம் எனது கட்சிக்காரரின் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்றார்.

எனவே, பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட தமது வாடிக்கையாளரின் கைத்தொலைபேசி மற்றும் 2 சிம் கார்ட்களை விடுவிக்குமாறும் நீதிமன்றத்தில் கோரினார்.

அந்த விளக்கமளிப்பைத் தொடர்ந்து, சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசி மற்றும் 2 சிம் அட்டைகளை விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், நாடாளுமன்ற வளாகத்தை இவ்வாறு வீடியோ எடுப்பது எவ்வாறு குற்றமாகும்? என்பது குறித்து எதிர்வரும் டிசம்பர் 13 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு தலங்கம பொலிஸாருக்கும் உத்தரவிட்டார். (ரெந-29)




**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

**காலைக்கதிர் TV YouTube தளம்**

# மனைப் பொருளியலில் டிப்ளமோ கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் வைபவம் சாவகச்சேரியில்





வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மனைப் பொருளியலில் டிப்ளமோ கற்கைநெறி பூர்த்தி செய்து ஆடை வடிவமைப்பில் தேசிய தொழிற் தகைமை ற்கை நெறியை மேற்கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்றைய தினம் நடைபெற்றது.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொன் விழா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் த.சசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் 302 பேருக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## ஒலுவில் அல்–மதீனா வித்யாலயத்தில் உணவும் போசணையும் கருத்தரங்கு



(கே.எ.ஹமீட்)

ஒலுவில் அல்-மதீனா வித்யாலயத்தில் இன்று ஒலுவில் ஆயுள் வேத வைத்தியசாலை டொக்டர் ஏ.எல்.எப். பஸ்மினாவினால் உணவும் போசணையும் பற்றிய மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இதில் உதவியாளராக எம்.எச்.எப். றிமாஸா மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

## வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள்



(ஹஸ்பர்)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வானது இன்று வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றது.

வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட ஈச்சிலம்பற்று கிராம சேவகர் பிரிவில் 164 பயனாளிகளுக்கும், பூமரத்தடிச்சேனை கிராமசேவகர் பிரிவில் 285 பயனாளிகளுக்கும் மற்றும் பூநகர் கிராம சேவகர் பிரிவில் 502 பயனாளிகளுக்கும் தலா 20 கிலோ துவரம் பருப்பு மற்றும் 5 லீற்றர் சமையல் எண்ணெய் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

## பத்தாயிரம் பனைவிதைகள், வேம்பு மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் காரைதீவு லயன்ஸ் கழகம் என்பவை ஏனைய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பத்தாயிரம்பனைவிதைகள்மற்றும்வேம்பு மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இவ் வேலைத்திட்டம் காரைதீவு கடற்கரை பிரதேசத்தில் லயன்ஸ் கழகத்தின் தலைவர்களான லயன் எந்திரி ம.சுதர்ஷன் மற்றும் லயன் எந்திரி த.சுரேந்திரகுமார் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

கடற்கரையில் பனைமர விதைகளை நடுதல், கடற்கரையை சுத்தப்படுத்துதல், டெங்கு விழிப்புணர்வு பதாகையை காட்சிப்படுத்தல், டெங்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற திட்டங்களை முன்னெடுக்கும் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சர்வதேச லயன்ஸ் மாவட்ட ஆளுநர் (306சி2) லயன் இஸ்மத் ஹமீத் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக பல பிரமுகர்களும் மற்றும் அரச - அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் ஊழியர்களும் கழக உறுப்பினர்களும் மற்றும் தொண்டர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# அகதிகளை ருவாண்டாவுக்கு திருப்பி அனுப்பிவைப்பது சட்டவிரோதம் பிரித்தானிய அரசின் சர்ச்சைக்குரிய திட்டத்துக்கு நீதிமன்றம் எதிர்ப்பு




உரிய ஆவணங்களின்றி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு திருப்பி அனுப்பிவைக்கும் பிரித்தானிய அரசின் சர்ச்சைக்குரிய திட்டம் சட்டவிரோதமானது, என்று அந்த நாட்டின் உச்சநீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

இது, பிரிட்டனை நோக்கிய அகதிகள் படையெடுப்பைத் தடுப்பதாக உறுதியளித்துள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான அரசுக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து பிரித்தானிய உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள தீர்ப்பில், ருவாண்டாவுக்கு அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த லண்டன் மேல்முறையீட்டு நீதிமன்றம், பிரிட்டனில் அடைக்கலம் தேடி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பினால், அந்த நாடு அவர்களை பாதுகாப்பற்ற மூன்றாவது நாட்டுக்கு அனுப்பி வைக்கும் என்பதற்கான முகாந்திரம் உள்ளது என்று கூறியது. இதனை உச்சநீதிமன்றமும் ஆமோதிக்கிறது.

எனவே, அகதிகளுக்கு ருவாண்டா பாதுகாப்பானது இல்லை என்ற அகதிகள் தரப்பு வாதத்தை நீதிமன்றம் ஏற்கிறது. இதன் மூலம், அகதிகளை உகாண்டாவுக்கு அனுப்பி வைப்பதற்கான அரசின் முடிவு சட்டவிரோதம் என்று அறிவிக்கப்படுகிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நர்களிலிருந்து வளமான வாழ்வாதாரத்துக்காக பிரிட்டனில் அடைக்கலம் தேடி ஏராளமானோர் வருவது தொடர்ந்து வருகிறது.

அவ்வாறு அடைக்கலம் தேடும் அகதிகளை பணத்துக்காக சட்டவிரோதக் கும்பல்கள் ஆபத்தான முறையில் பிரிட்டனுக்கு கடத்தி வரும் சம்பவங்களும் அடிக்கடி நடந்து வருகின்றன.

இந்த நிலையில், தங்கள் நாட்டுக்கு உரிய ஆவணங்களின்றி அடைக்கலம் தேடி வருவோரை ருவாண்டாவுக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கும் திட்டத்தை கடந்த 2022 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் போரிஸ் ஜான்ஸன் அறிவித்தார்.

அடைக்கலம் கோரி அகதிகள் அளிக்கும் விண்ணப்பங்களை சரிபார்த்து, அவர்களுக்கு புகலிடம் அளிப்பது குறித்து பிரிட்டன் முடிவு செய்யும்வரை அவர்கள் ருவாண்டா தலைநகர் கிகாலியிலுள்ள தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பார்கள் எனவும், அதுவரை அவர்கள் அனைவரும் சட்டவிரோத அகதிகளாகவே கருதப்படுவர் எனவும் அவர் கூறினார்.

சர்ச்சைக்குரிய இந்த திட்டத்தை தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் தலைமையிலான அரசும் முன்னெடுத்துச் செல்கிறது.

எனினும், அகதிகள் நல உரிமை அமைப்பாளர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்பினர் இந்த திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அந்த எதிர்ப்பையும் மீறி, இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானியாவின் அப்போதைய உள்துறை அமைச்சர் ப்ரீத்தி படேலுக்கும் ருவாண்டா வெளியுறவுத் துறை அமைச்சர் வின்சன்ட் புரூட்டாவுக்கும் இடையே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கையொப்பமானது.

எனினும், சர்ச்சைக்குரிய அந்தத் திட்டத்தை எதிர்த்து ஈரான், இராக், சிரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகளின் சார்பில் லண்டன் உயர்நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு மனுத் தாக்கல் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், சட்டவிரோத அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பிவைக்கும் அரசின் திட்டம் சட்டத்துக்கு எதிரானது இல்லை என்று கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தீர்ப்பளித்தது.

எனினும், அந்தத் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை கடந்த ஜூன் மாதம் விசாரித்த முறையீட்டு நீதிமன்றம், ருவாண்டாவுக்கு அகதிகளை அனுப்பும் அரசின் முடிவு சட்டவிரோதம் எனத் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை பிரித்தானிய உச்சநீதிமன்றம் தற்போது உறுதி செய்துள்ளது. (04)

## பங்களாதேஷில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நாடாளுமன்றத் தேர்தல்




பங்களாதேஷில் அடுத்த ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு பதவி விலகக் கோரியும் கட்சிச் சார்பற்ற இடைக்கால அரசின் மூலம் தேர்தலை நடத்தக் கோரியும் எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. இந்தச் சூழலில் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

கடந்த 2 வாரங்களாக நடைபெற்றுவரும் இப்போராட்டத்தில் எதிர்க்கட்சிகளுக்கும் காவல்துறைக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு பொலிஸார் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. (04)

# காஸாவின் அல்-ஷிஃபா மருத்துவமனைக்குள் நுழைந்து தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தது இஸ்ரேல் படை



காஸாவின் மிகப் பெரிய மற்றும் முக்கிய மருத்துவமனையான அல்-ஷிஃபா மருத்துவமனையை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல் ராணுவம், நேற்று அந்த மருத்துவமனைக்குள் நுழைந்தது.

அந்த மருத்துமனையின் கீழே ஹமாஸ் அமைப்பினர் சுரங்கக் கட்டமைப்புகளை உருவாக்கி தங்களது தலைமையமாகப் பயன்படுத்தி வருவதாக குற்றஞ்சாட்டி வரும் இஸ்ரேல் படையினர், மருத்துமனையின் ஒவ்வொரு அறையாக சோதனையில் ஈடுபட்டு வருவதாக அங்கிருப்பவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா சிட்டியுள்ள அல்-ஷிஃபா மருத்துவமனைக்குள் ராணுவம் நுழைந்துள்ளது.

அதற்கு முன்னதாக, மருத்துவமனையைச் சுற்றிலும் வெடிகுண்டுகளையும் ஹமாஸ் ஆயுதக் குழுவினரையும் இஸ்ரேல் படையினர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களுடன் ஏற்பட்ட மோதலில் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலில் இருந்து கொண்டு வரப்பட்ட 'இன்குபேட்டர்'கள், குழந்தைகளுக்கான உணவுகள், மருந்துப் பொருள்களை அல்-ஷிஃபா மருத்துவமனைக்குள் ராணுவத்தினர் வெற்றிகரமாகக் கொண்டு சென்றுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக்கட்டப் போவதாக இஸ்ரேல் அரசு சூளுரைத்துள்ளது. அதற்காக காஸா பகுதியை ஒரு மாதத்துக்கும் மேல் முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் காஸாவுக்குள் நுழைந்து தாக்குல் நடத்தி வருகிறது.

இதில், காஸா பகுதியில் அமைந்துள்ள மருத்துவமனைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன. குறிப்பாக, காஸாவின் மிகப் பெரிய அல்-ஷிஃபா மருத்துவமனையை இஸ்ரேல் ராணுவம் 5 நாள்களாக சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதால் அந்த மருத்துவமனையின் செயல்பாடு நிறுத்தப்பட்டது. எரிபொருள் பற்றாக்குறையால் மின்தடை ஏற்பட்டு அந்த மருத்துவமனையின் செயல்பாடுளும் முடக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, 'இன்குபேட்டரில்' பாதுகாக்கப்பட்டு வந்த குறைப்பிரசவ சிசுக்கள் வெளியே எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 சிசுக்கள் உள்பட சுமார் 40 நோயாளிகள் சிகிச்சை நிறுத்தப்பட்டதால் உயிரிழந்ததாக ஹமாஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். உயிரிழந்த அனைவரது உடல்களும், மருத்துவமனை வளாகத்துக்குள் மிகப் பெரிய பள்ளம் தோண்டப்பட்டு அதில் கூட்டாக அடக்கம் செய்யப்பட்டதாக அவர்கள் கூறினர். அல்-ஷிஃபா மருத்துவமனையில் மட்டும் தற்போது 650 நோயாளிகளும், அடைக்கலம் தேடி வந்துள்ள பொதுமக்கள் 5,000 முதல் 7,000 பேரும் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த மருத்துவமனைக்குக் கீழே ஹமாஸ் அமைப்பினர் சுரங்க நிலைகளை அமைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டி வருகிறது. எனினும், இதற்கான ஆதாரங்கள் எதையும் அந்த நாடு வெளியிடவில்லை. இந்தக் குற்றச்சாட்டை ஹமாஸ் அமைப்பும் மருத்துவமனை நிர்வாகமும் திட்டவட்டமாக மறுத்து வருகின்றன. (04)

# மாவீரர் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு





கிளிநொச்சி மாவட்டத்தின் மாவீரர் தின நிகழ்வுகளில் முதலாவதாக மாவீரர் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்றைய தினம் நடைபெற்றது.

புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட 9 கிராமங்களில் உள்ள மாவீரர் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் இந்நிகழ்வில், மாவீரர்களது பெற்றோர் தனது பிள்ளைகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனும் கலந்து தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

அத்துடன் மாவீரரது பெற்றோருக்கு அவர்களின் பிள்ளைகளின் நினைவாக நினைவு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# உறவுகள் சொல்லும் உணர்வு சிறுகதை நூல் திருகோணமலையில் அறிமுக விழா



(ஹஸ்பர்)

கதிர்.திருச்செல்வத்தின் “உறவுகள் சொல்லும் உணர்வு” சிறுகதை நூல் அறிமுக விழா நேற்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு கவிஞர் க .யோகானந்தன் தலைமையில் திருகோணமலை - கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நூல் அறிமுகத்தைக் கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஏ.சி. எம் முஸ்ஸில் நிகழ்த்தினார்.

முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் கலந்து கொண்டார்.

நூல்திறனாய்வினை தென் கிழக்குப் பல் கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் அ.ப.மு. அஸ்ஃரப் நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை அதிபர் திருமதி யு .சுஜந்தினிக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் வழங்கி வெளியிட்டு வைத்தார்.

ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் கதிர்.திருச்செல்வம் வழங்கினார்.




# வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் பெருவிழாவில் செம்புல இளங்குருசில் விருது

யாழ்ப்பாணம் – அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் க.அனுஜனுக்கு, செம்புல இளங்குருசில் விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா நேற்றைய தினம் புதன்கிழமை அமரர் கதிரவேலு கேதீஸ்வரன் அரங்கில் நடைபெற்றது.

அதன்போது, வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையினரால்2023ம்ஆண்டின்அறிவிப்பாளருக்கான “செம்புல இளங்குரிசில்” விருது, அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் க.அனுஜனுக்கு, வழங்கப்பட்டது.

இவ்விருதினை இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கோப்பாய் பிரதேச செயலாளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் மூத்த, இளங்கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (04)

# கட்டளையிடப்பட்ட தவறாளர்களுக்கான போதைவஸ்து பாவனை - விழிப்புணர்வு



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட கட்டளையிடப்பட்ட தவறாளர்களுக்கான போதைவஸ்து பாவனைத் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வானது கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் இயங்கும் பிராந்திய சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட தவறாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

போதைப் பாவனையில் இருந்து விடுபடுவதற்கான உளவளத்துணை செயற்பாடுகள் மற்றும் உடல் உள ரீதியான தாக்கங்கள், சமூகச் சீர்கேடு போன்ற பல பாதக விடயங்களில் இருந்து தங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் தொடர்பில் வளவாளர்களால் விழிப்புணர்வூட்டப்பட்டது. தம்பலகாமம், கந்தளாய், கிண்ணியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தவறாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் வளவாளர்களாக கப்பல்துறை ஆயுர்வேத வைத்தியசாலையின் சிரேஷ்ட பதிவாளரும் வைத்தியருமான சாஸ்வதா சிவபதிஸ், வைத்தியர் ஆர்.எம்.மல்சா ஜெயரட்ண உள்ளிட்டோர் கலந்து கொண்டு பல விடயங்களைத் தெளிவூட்டினர்.

இதில் திருகோணமலை மாவட்டப் பிராந்திய சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தரும் பொறுப்பதிகாரியுமான எம்.எச்.முபாரக், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பல்கலைக் கழகப் பட்டத்துக்கு நிகரான கல்வித் தகுதியை தேசிய தொழில் தகைமைக் கற்கையூடாகப் பெற முடியும்!

## வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவிப்பு

வடமாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதியம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகள் கடந்த 2022 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி உயர்கல்வியைத் தொடரமுடியாது இருப்பின், அவர்கள் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் கற்கை நெறியை கற்பதற்கு ரூபா 25,000 உதவித் தொகையாக வழங்கப்படும் எனவும், இது குறித்த வடமாகாண பிரதம செயலகத்தின் இணையத்தளத்தினூடாக மேலதிக தரவுகளைப் பெற்று கொள்ளலாம் எனவும் வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவித்தார் .

இன்று காலை சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மனைப்பொருளியல் கற்கைநெறியின் ஆடை வடிவமைப்பு தேசிய தொழில் தகைமையினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், ஒரு காலத்தில் நாங்களும் பட்டதாரியாக சான்றிதழ் பெறவேண்டும் என நினைத்துள்ளோம். பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறும் சூழல் உங்களுக்கு ஏதோ ஒரு பிரச்சினையின் நிமித்தம் அதனை பெறமுடியாது போயிருக்கும். நீங்கள் எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளுக்கு இந்த தேசிய தொழில் தகைமை சான்றிதழை பட்டத்திற்குச் சமனாகக் காட்டமுடியும்

கிராமிய அபிவிருத்தி திணைக்களத்திற்கும் நைற்றா நிறுவனத்திற்கும் இந்த தகைமையை உங்களுக்கு ஏற்படுத்தி தந்தமைக்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய தொழில் தகைமையினை அதன் நான்காம் தரத்துடன் நிறுத்திவிடாது அதன் ஏழாம் தரம் வரை சென்று நீங்கள் பட்டம் ஒன்றினையும் பெற்று கொள்ளலாம். உங்களுக்கு தேசிய தொழில் தகைமையின் 7 ஆம் தரத்தினைப் பெற்றால் நீங்கள் அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகிக்கலாம். ஆகவே, அடுத்த சந்ததியாகிய நீங்கள் உங்களுக்கான முன்னேற்றம் குறித்த கனவினை உருவாக்க வேண்டும்.

இன்று உங்களுக்கான வாய்ப்பினை கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. ஆகவே, இதனை தொடர்வது உங்கள் கடமையாகும்.

இந்த சான்றிதழை வைத்துகொண்டு நீங்கள் வேலைவாய்ப்பினை பெற்று கொள்ளலாம்.

தற்பொழுது உண்மையிலேயே எத்தனையோ பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இன்றி இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கல்வித் தகைமை இருக்கின்றது ஆனால், தொழில் தகைமை இருப்பதில்லை. ஆனால் இப்பொழுது உங்களுக்கு சான்றிதழுடன் தொழில் தகைமையும் உள்ளது.

அரச சேவையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. ஆசிரியர் சேவைக்கு விண்ணப்பம் கோரியுள்ளோம். வெற்றிடத்தினை விட 25 வீதத்திற்கும் மேலதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆகவே, நீங்கள் இந்தப் பயிற்சியில் ஏழாவது தரத்தினை சித்திபெற்று பின்னர் அரசாங்க வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் இந்தச் செய்திகளை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லவேண்டும். 7000 இற்கும் மேற்பட்டோர் உயர்தரப் பரீட்சையுடன் கல்வியை இடைநிறுத்துகின்றார்கள்.

இதுவரை 1400 இளைஞர் யுவதிகளுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழை வழங்கியுள்ளோம். எனவே சாதாரண தர சித்தி, உயர்தர சித்தி பெற்றும் பல்கலைக்கழகம் போக முடியாவிட்டாலும் அந்தக் கனவினை நீங்கள் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழூடாகப் பெற்று கொள்ளலாம், எனவும் அவர் குறிப்பிட்டார்.

(01, 04)

# மியான்மரில் ராணுவ முகாம் ஆயுதக் குழுவினர் வசம் தப்பிய படை வீரர்கள் இந்தியாவிற்குள் தஞ்சமடைவு

மியான்மரில் ராணுவ முகாமை ஆயுதக் குழுவினர் கைப்பற்றியதால் அங்கிருந்து தப்பித்து அடைக்கலம் தேடி அந்நாட்டைச் சேர்ந்த மேலும் 2 ராணுவ வீரர்கள் இந்தியாவின் மிஸோரமுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதுவரை மியான்மரில் இருந்து மிஸோரமுக்கு தப்பி வந்த வீரர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது என்று இந்தியத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

மியான்மரில் ராணுவ முகாமை ‘மக்கள் பாதுகாப்புப் படை’ என்னும் ஆயுதக் குழுவினர் கைப்பற்றியதால், அந்த முகாமைச் சேர்ந்த வீரர்கள் அடைக்கலம் தேடி இந்தியாவின் வடக்கிழக்கு மாநிலமான மிஸோரமில் தஞ்சம் புகுந்தனர்.

கிழக்கு மிஸோரமின் சாம்பாய் மாவட்டத்தில் உள்ள எல்லை கிராமமான சோகவ்தர் காவல் நிலையத்தில் 39 வீரர்கள் கடந்த திங்களன்று மாலை சரணடைந்தனர். இந்நிலையில், மேலும் 5 வீரர்கள் அதே காவல் நிலையத்தில் சரணடைந்தனர்.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, அஸ்ஸாம் ரைபிள்ஸ் படைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் அனைவரும் இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்திய மாநில உள்துறை அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘சாம்பாய் மாவட்டத்திலிருந்து மணிப்பூர் மாநிலத்தின் எல்லை நகரமான மோரேவுக்கு மியான்மர் வீரர்கள் முதலில் அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர், அங்கிருந்து மியான்மரின் தமு நகருக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்’ என்றார். (04)








## வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்தால் மக்களுக்குத்தான் பாதிப்பு - அகிலவிராஜ்



வரவு செலவுத் திட்டத்தை விமர்சிப்பதால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள்இ என முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடு இருக்கும் நிலைக்கு இம்முறை முன்மொழியப்பட்டுள்ளதே சிறந்த வரவு செலவுத் திட்டம் என நாங்கள் கருதுகின்றோம்.

இன்னும் சிறிது காலத்தில் இந்த நாடு கட்டியெழுப்பப்படும் என்று எதிர்க்கட்சிகளுக்கும் தெரியும். அவ்வாறு நாடு சிறந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டால் அவர்களால் அரசியல் நடத்த முடியாது. ஆகவேதான்இ வரவு செலவுத் திட்டம் குறித்து முரணான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள்.

தற்போது முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் இன்றி மாற்று வேலைத்திட்டங்களை யாராவது முன்வைத்திருக்கின்றார்களா?

இவ்வாறு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை விமர்சித்துத் தடுப்பதன் மூலம் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள்இ எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## பொலிஸ் அதிகாரிக்கு பிக்கு கத்திக் குத்து!

பிக்கு ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகிக் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெனியாய காவல் நிலையத்தில் கடமையாற்றிய 37 வயதுடைய திருமணமான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான பொலிஸ் உத்தியோகத்தர், பிக்குவின சகோதரியுடன் தொடர்பு வைத்திருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் பல்லேகம, கங்கொட வீதியில் அமைந்துள்ள சம்போதி முதியோர் இல்லத்திற்கு அருகில் நடைபெற்றுள்ளது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, மறைத்து வைத்திருந்த கத்தியால் பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்துப் பகுதியில் பிக்கு சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 18 வயதுடைய குறித்த பிக்குவை பொலிஸார் கைது செய்துள்ளனர். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2023இல் வெளியிடப்பெற்றது.